FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

This Question Paper consists of 31 questions and 8 printed pages.
* 8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No. | | | | | | | | | | | | | Code No. 49/S/O/TM

Set **A**

# TAMIL
## (தமிழ்)
## (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி :

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் :

1. ______________________

2. ______________________

**I பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைதாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கபடாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**பொதுக்குறிப்பு :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL

## (தமிழ்)

## (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு :** (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) வினாக்களை நன்கு புரிந்து கொண்டு விடையளிக்க.

(3) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

**பொருத்தமான விடையை எடுத்து எழுதுக.** **1x11=11**

**1.** உரிமைச் செம்பயிரில் தமிழ் என்னவாக இருக்கிறது ?

(A) இலையாக (B) வேராக

(C) கனியாக (D) காயாக

**2.** பிறையும் சடையும் சூடியவர் யார் ?

(A) முருகன் (B) விநாயகர்

(C) பிரம்மா (D) சிவபெருமான்

**3.** தவிசு - பொருள் தருக.

(A) தவம் (B) செபம்

(C) இருக்கை (D) இறைவன் இருக்குமிடம்



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

4. ஏக்கறுதல் என்றால் என்ன ?
(A) நிமிர்ந்து நிற்றல் (B) பணிந்து நிற்றல்
(C) இரந்து நிற்றல் (D) மறைந்து நிற்றல்

5. படைகளுக்கெல்லாம் தலைவராக விளங்குபவர் :
(A) அமைச்சர் (B) அரசர்
(C) படைத்தலைவர் (D) மடாதிபதி

6. கயையிலிருந்து இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டது :
(A) புத்தர் சிலை (B) போதி மரம்
(C) புத்த பீடம் (D) போதி மரத்தின் கிளை

7. மாணவர்கள் எத்தனை ஆண்டுகள் பள்ளியில் பயில்கின்றனர் ?
(A) பத்தாண்டுகள் (B) ஐந்தாண்டுகள்
(C) ஆறாண்டுகள் (D) பன்னிரெண்டு ஆண்டுகள்

8. உக்கிரப் பெருவழுதி :
(A) ஆங்கிலேயரை வென்றான்
(B) மருது பாண்டியரை வென்றான்
(C) வேங்கை மார்பனை வென்றான்
(D) வீரசேனனை வென்றான்

9. தைப்பூசத்தில் நடைபெறும் திருவிழா :
(A) பொங்கல் திருவிழா (B) வைகாசி விசாகம்
(C) புஷ்ய ஸ்நானம் (D) தெப்பத் திருவிழா

10. திருவள்ளுவரது நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடம்__________.
(A) சென்னை கடற்கரை (B) தில்லி ஜந்தர் மந்தர்
(C) கோயம்புத்தூர் (D) கன்னியாகுமரி கடல்

11. இணைச்சொல் தொடருக்கு எடுத்துக்காட்டு :
(A) ஓடு ஓடு (B) கலகல
(C) இரவு பகல் (D) தீ! தீ! தீ!



www.FirstRanker.com
FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

12. **கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.**

1914 இல் உலகப் போர் மூண்டது. இங்கிலாந்தை எதிர்த்து ஜெர்மனி போரிட்டது. 'எம்டன்' என்ற பெயர் கொண்ட நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றில் செண்பகராமன் உதவிப் பொறியாளராகப் பொறுப்பேற்றார். வங்காள விரிகுடாவிற்கு வந்த எம்டன் கப்பல் சென்னை மாநகர் எதிரே கடலில் நின்றது. உயர்நீதி மன்றத்தையும் சென்னைக் கோட்டையையும் நோக்கிக் குண்டுகளை வீசியது. ஆங்கில அரசுக்குச் சொந்தமான இரண்டு பெரிய எண்ணெய்க் கிடங்குகள் தீப்பற்றி எரிந்து அழிந்தன. உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதி அடியோடு பெயர்ந்து வீழ்ந்தது. கோட்டையை நோக்கி வீசப்பட்ட குண்டு வெடிக்காமல் மண்ணில் புதைந்தது. அதன் வீரியம் குறைக்கப்பட்டு எழும்பூர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. ஜெர்மனியில் நாசி இயக்கம் வளர்ந்தது. ஹிட்லர் சர்வாதிகாரியானார். 'இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தால் நாட்டைத் திறமையாக ஆட்சி புரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது சந்தேகமே' என்று ஒரு சமயம் ஹிட்லர் தாழ்த்திக் கூறியதைக் கேட்டு செண்பகராமன் கொதித்தெழுந்தார். ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்பு கேட்க வைத்தார். தங்கள் தலைவரை வாதாடி வென்ற செண்பகராமனை நாசியர் வெறுத்தனர். எனவே அவர் கலந்து கொண்ட அரசாங்க விருந்தொன்றில் திட்டமிட்டபடி நஞ்சினைக் கலந்து பரிமாறினர். நஞ்சு கலந்த உணவினை உண்ட அவர் நோய்வாய்ப்பட்டார். தீவிர சிகிச்சைக்குப் பின் நலம் பெற்ற அவரை நாசிகள் தாக்கிப் படுகாயப்படுத்தினர். உயிர் பிரியும் முன், 'நான் இறந்த பிறகு என் சாம்பலை இந்தியாவிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். சுதந்திரம் பெற்ற பின் சாம்பலின் ஒரு பகுதியை கரமனை ஆற்றில் கரைக்க வேண்டும். மற்றொரு பகுதியை நாஞ்சில் நாட்டு வயல்களில் தூவ வேண்டும்' என்றார். அவரது ஆசையை அவரது மனைவி ஜான்சி நிறைவேற்றினார்.

**வினாக்கள் :**

(1) செண்பகராமனின் மனைவியின் பெயர் யாது ? 1

(2) செண்பகராமன் பொறுப்பேற்ற கப்பலின் பெயர் என்ன ? 1

(3) முதல் உலகப்போர் எப்போது மூண்டது ? அப்போது ஜெர்மன் எவ்வாறு செயல்பட்டது ? 3

(4) ஜெர்மனியில் வளர்ந்த இயக்கத்தின் பெயர் யாது ? 1

(5) செண்பகராமனின் இறுதி ஆசை யாது ? 2

(6) செண்பகராமன் கொதித்தெழக் காரணம் யாது ? 2

(7) செண்பகராமனை நாசியர் வெறுக்கக் காரணம் என்ன ? 2



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

13. பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ ? அப்பா ?
எவர் உடம்பினுக்கும் சிவப்பே இரத்த நிறமப்பா
எவர் விழி நீர்க்கும் உவர்ப்பே இயற்கை குணமப்பா
பிறப்பினால் எவர்க்கும் பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே உலகம் நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே என்றும் தீண்டவொண்ணாதார்

**வினாக்கள் :**

1. எவற்றில் சாதி தெரியாது என்று ஆசிரியர் கூறுகிறார் ? 2
2. விழி நீரின் தன்மை யாது ? 1
3. சிறப்படைய வேண்டுமெனில் ஒருவர் செய்ய வேண்டுவது என்ன ? 1
4. மேற்குலத்தோர் யார் ? 1
5. தீண்டவொண்ணாதார் யார் ? 1

14. அசோகர் எங்கெங்கு கல்விக் கூடங்கள் அமைத்தார் ? 1

15. ஒரு மைக்ரோ செகண்டு என்பது என்ன ? 1

16. கமன சித்தரின் செயல்கள் யாவை ? 1

17. இறால் பண்ணைகளால் எவ்விதம் சூழல் கெடுகிறது ? 1

18. தமிழில் மொழி பெயர்க்க. 1

(1) Capacitor (2) Versatility

19. (அ) சேர்த்து எழுதுக. 4x½=2

(1) உலகு + இன்புறல் (2) கை + உற
(3) இனிமை + நீர் (4) ஊர் + ஆம் + ஆல்

(ஆ) பிரித்து எழுதுக. 4x½=2

(1) கணக்கினை (2) செந்தமிழ் நாடு
(3) மூப்பின்கண் (4) கிணற்றகத்து



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(1) சாவது எளிது. __________ சான்றாண்மை.

(2) கற்றவரை அனைவரும் போற்றுவர். கல்லாதவரை அனைவரும் __________.

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(1) ஞாயிறு (2) இறும்பூது

(3) கணிசமாக (4) நிபுணர்

20. பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) தலையிடுதல் (2) கை கழுவுதல்

21. வங்கியிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தில் Entered, Folio என்ற பகுதி யாருக்குரியது ? 1

22. சாலையில் மின் விளக்குகள் இல்லாததால் ஏற்படும் தொல்லை குறித்து குறிப்புரை எழுதுக. 4

23. தமிழின் பெருமைகளைப் பாரதிதாசன் எவ்வாறு சித்திரித்துக் காட்டுகிறார் ? 5

24. தலைகவசம் அணியாமலும் கைபேசியில் பேசிக் கொண்டும் வாகனம் ஓட்டக்கூடாது என்பது குறித்து அரசு கொடுத்த அறிவிப்பினை எழுதுக. 5

**(அல்லது)**

புத்தகக் கண்காட்சி நடைபெறப் போவதற்கான விளம்பர அறிவிப்பு ஒன்றை எழுதுக.

25. (அ) வேலை - வேளை பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. 2

(ஆ) கனைத்தல் - முழங்குதல் என்னும் ஒலிகள் எவ்விலங்குகளுக்குரியவை ? 2

26. உமது பள்ளியில் விளையாட்டு விழாவை ஒட்டி நடத்தப்படும் போட்டிகள் குறித்த செய்திகளை அறிவிப்புப் பலகையில் இடம்பெறுமாறு அட்டவணை தயாரிக்க. 5

**(அல்லது)**



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

பேருந்தில் பயணம் செய்வதற்கான முன்பதிவு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. [45, வள்ளுவன் தெரு, திருநெல்வேலியில் வசிக்கும் நீ உன் தாய் தந்தையருடன் இரவு 9.10 க்கு திருநெல்வேலியிலிருந்து சென்னை செல்வதற்கு ஏற்றவாறு இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. உனது பெயர் புகழேந்தி என்றும் தடம் எண் 2641 என்றும் கொள்க.]

**பேருந்து முன்பதிவுப் படிவம்**

**பயணிகளுக்கு அன்பான வேண்டுகோள்**

1. பேருந்தில் முன்பதிவு செய்திருப்போர் பேருந்து புறப்படுவதற்கு 30 நிமிடம் முன் வர வேண்டும்.
2. பயணிகள் தங்கள் உடைமைகளை பேருந்தில் வைத்து விட்டு வெளியே செல்ல வேண்டாம்
3. முன்பின் தெரியாத நபர்கள் கொடுக்கும் பொருள்களை வாங்குவதைத் தவிர்க்கவும்.

| வ.எண் | பெயர் | வயது | ஏறும் இடம் | இறங்கும் இடம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

தடம் எண் : [ ][ ][ ][ ]

பயண நாள் : ____________

புறப்படும் நேரம் : ________

போய்ச் சேருமிடம் : [ ][ ][ ][ ]

விண்ணப்பம் செய்பவர் கையொப்பம் ------------------------------

முகவரி ------------------------------

------------------------------



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**27.** முத்தாச்சி தன் மகளுக்குத் திருமணம் செய்ய எவ்வளவு சிரமப்படுகிறாள் என்பதை விளக்குக. **5**

**(அல்லது)**

பெரிய மருதுவின் இறைப்பற்றை எழுதுக. **5**

**28.** பிழை திருத்தம் செய்க : **5**

(1) திணம் ஒரு குறல் படி.

(2) மறத்தால் செய்யப்பட்ட இறுக்கை.

(3) முதல்வர் வருகை தந்தான்..

(4) வீடுகளுக்குக் கதவுகள் பாதுகாப்புத் தருகின்றது..

(5) அவன் நாளை வந்தேன்.

**29.** நீவிர் வாழும் பகுதியில் கழிவு நீர் மூலம் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி மாநகராட்சிக்குக் கடிதம் எழுதுக. **7**

**(அல்லது)**

உனக்குப் பிடித்த நூல் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**30.** ஏதேனும் ஒன்றுக்கு நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. **5**

(1) உலகத்தோடு ஒட்ட ஒழுகு.

(2) காலம் பொன் போன்றது.

(3) இயற்கையைப் பாதுகாப்போம்.

**31.** ஏதேனும் ஒன்றுக்கு இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. **10**

(1) இருபத்தோராம் நூற்றாண்டில் இந்தியா.

(2) வாய்மையின் சிறப்பு.

(3) நான் விரும்பும் கவிஞன்.

- o O o -



FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com